உ

வேலும் மயிலும் துணை

திருப்புகழில் சைவசித்தாந்தம்



வித்துவான்
கோ. மு. முத்துசாமிபிள்ளை ஐ. ஏ. எஸ் (ஓய்வு)

சைவ சித்தாந்தப் பெருமன்றம்
4, (முதல்மாடி), வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலாப்பூர், சென்னை-4

சைவ சித்தாந்தப் பெருமன்ற வெளியீடுகள்

		ரூ. பை
1.	கூட்டு வழிபாட்டுப் பாமாலை	1 00
2.	பஞ்சபுராணத் திரட்டு	0 70
3.	முப்பொருள் இயல்பு	2 00
4.	சிவாலய வழிபாட்டுப் பாடல் திரட்டு	1 00
5.	முருகன் முந்நூல்	1 50
6.	சமாஜ பவழ விழா மலர்	2 50
7.	சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே	0 50
8.	பெருவிண்ணப்பம்	0 25
9.	சிவஞான சித்தியார்	3 00
10.	சைவசித்தாந்த சாத்திரத் திரட்டு	0 50
11.	கங்கையைச் சடைமேல் வைத்த திருமுறைத்திரட்டு	0 75
12.	சந்தானாச்சாரியர் வரலாறு	0 75
13.	திருமுறைப்பாராயணப் பதிகத்திரட்டு	0 75
14.	திரு.வி.கவின் சிவஞான பாடிய அணிந்துரை	0 50
15.	போற்றித்திருவகவல்	1 00
16.	அம்மை தோத்திரத்திரட்டு	1 25
17.	முதல் திருமுறை	10 00
18.	முத்து விழாமலர்	10 00
19.	உண்மை விளக்கம் (ஆங்கிலம்)	5 00
20.	திருவாசகம் (மூலமும் குறிப்புரைகளும்)	10 00

நூல்களை அஞ்சல்வழி பெற விரும்புவோர் நூல் விலையுடன் அஞ்சல் விலையும் சேர்த்து மணி ஆர்டரில் அனுப்பினால் நூல்கள் அனுப்பி வைக்கப்படும். வி.பி.பி. வழி அனுப்ப இயலாது.

[illegible]

[illegible]

[illegible]

Rs 1/-

73-1

உ

வேலும் மயிலும் துணை

திருப்புகழில் சைவசித்தாந்தம்

அன்பளிப்பு:
தஞ்சாவூர்
நடராஜபிள்ளை உலகநாதன் M.A.B.T



அன்பளிப்பு:
தஞ்சாவூர்
நடராஜபிள்ளை உலகநாதன் M.A.B.T

வித்துவான்
கோ. மு. முத்துசாமிபிள்ளை ஐ. ஏ. எஸ் (ஓய்வு)

சைவ சித்தாந்தப் பெருமன்றம்
4, (முதல்மாடி), வேங்கடேச அக்கிரகாரம் சாலை,
மயிலாப்பூர், சென்னை-4

முதற்பதிப்பு : ஜூலை, 1988

விலை : ரூ.

ஒரு படி ரூ. 1.00
10 படிகள் ரூ. 9.00

நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-600 014
தொலைபேசி : 833231.

73-1

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

சிவபிரானைப் போற்றிய நம் சமயாசாரியர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தலங்கள் தோறும் சென்று அருட்டிரு அருணகிரிநாதர் பெருமான் முருகனையே முழுமுதற்கடவுளாக நினைந்து வழிபட்டுத் "திருப்புகழ்" பாடல்களை அருளியுள்ளார். சுந்தரர் பெருமானுக்குச் சிவனே "பித்தா" என்று அடியெடுத்துக் கொடுத்தது போல் முருகனே அருணகிரிநாதருக்கு "முத்தைத் தருபத்தித்திருநகை" என்று அடியெடுத்துக் கொடுத்தார். நால்வர்கள் அருளிய பாடல்களில் உள்ள சைவசித்தாந்தக் கருத்துக்கள் திருப்புகழிலும் ஆங்காங்கே விரவி வருகின்றன. இதிலிருந்து அருணகிரிநாதர் நம் நால்வர் நெறியையே பின்பற்றியவர் என்பது நன்கு தெளிவாகின்றது.

அருணகிரிநாதர் பாலும் அவரருளிய திருப்புகழ்பாலும் ஆராக்காதல் கொண்ட திரு. மா. சிவராமன் பி. ஏ. அவர்கள் மயிலையில் திருப்புகழ் சபையைப் பல ஆண்டுகளாக நடத்தி வருபவர். நமது சைவசித்தாந்தப் பெருமன்றத்தோடு 40 ஆண்டுகட்குமேலாக மிக நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு பொறுப்புகளிலிருந்து தொடர்ந்து பணியாற்றி வருபவர். அவர் நமது மன்றத்தில் 1978ஆம் ஆண்டு அருணகிரிநாதர் விழாவை ஆண்டு தோறும் நடத்துவதற்காக ஓர் அறக்கட்டளையை அமைத்தார்.

அவ்வறக்கட்டளையின் 11வது ஆண்டுச் சொற்பொழிவைத் திரு. சிவராமன் அவர்கள் "திருப்புகழில் சைவசித்தாந்தம்" என்ற தலைப்பில் முன்னதாக எழுதிவாங்கி அவர்தம் 70ஆம் ஆண்டு "பவழவிழா" நினைவாகத் தம் செலவில் நம் பெருமன்ற வெளியீடாக இந்நூலைக் கொண்டு வந்துள்ளார். இதன்மூலம் எல்லா அறக்கட்டளைச் சொற்பொழிவுகளையுமே இப்படி நூலாகக் கொண்டு வருவது மிக்க பயனுடையதாக இருக்கும் என்று வழிகாட்டியுள்ளார்.

இந்நூல் விற்றுவரும் தொகையைக் கொண்டு அவர் அமைத்துள்ள அறக்கட்டளை விழாவில் அதிகப்படியாக ஆகக்கூடிய

செலவுக்கும், இப்படிப்பட்ட நூல்வெளியீட்டுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். அதன்படி செயற்படுவதாக திரு. மா. சிவராமன் அவர்களுக்கு உறுதி கூறி இந்தநூல் வெளியீட்டுக்கு நிதி அளித்ததற்கு மன்றத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை நன்முறையில் எழுதிக் கொடுத்த அறக்கட்டளைச் சொற்பொழிவாளரும் நமது பெருமன்றத்தின் முன்னாள் தலைவருமான வித்துவான் திரு. கோ. மு. முத்துசாமிப்பிள்ளை ஐ. ஏ. எஸ் (ஓய்வு) அவர்கட்கும், இந்நூலை வெளியீடு செய்த பெருமன்ற முன்னாள் செயலாளர் வித்துவான் திரு. அம்பை சங்கரனார் அவர்களுக்கும், முதல் இதழைப் பெற்றுக் கொண்ட தெய்வீக சித்தாந்த இலக்கியமன்றத் தலைவர் திருக்கேதாரச் செல்வர் திரு. ந. ரா. ஆடலரசு அவர்களுக்கும், இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் கவிஞர் திரு. நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் பெருமன்றத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் விரைவில் செலவாகித் தொடர்ந்து இதுபோன்ற நூல்கள் வெளிவர அன்பர்கள் ஆதரவை வேண்டி அவர்கட்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்னை-4
9-7-1988

ந. ஒளியரசு,
செயலாளர்.

உ

முன்னுரை

"திருப்புகழில் சைவ சித்தாந்தம்" என்னும் இச்சிறுநூல் திரு எம். சிவராமன் அவர்கள் சைவசித்தாந்தப் பெருமன்றத்தில் நிறுவிய அறக்கட்டளையின் கீழ் 11வது ஆண்டு சொற்பொழிவாக வெளிவருகிறது. இதனை என் சிற்றறிவு கொண்டு எழுதித் தந்துள்ளேன். இத்தகைய பணிபுரியவும், சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் செயலாளராக ஓராண்டும், துணைத்தலைவராக ஓராண்டும், தலைவராக ஏழாண்டும் பணிபுரியவும் வாய்ப்பளித்த இப்பெருமன்றத்திற்கு யான் கடமைப்பட்டுள்ளேன்.

பி. ஏ பட்டம் பெற்று அஞ்சல் துறையில் கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள பேரன்பர் சிவராமன் அவர்களை முப்பத்தைந்து ஆண்டுகளாக யான் நன்கறிவேன். இவர் தமது பள்ளிப்படிப்பின்போதே 11ஆவது வயதில் திருப்புகழ் இசைக்காகப் பரிசுபெற்றார், தமது இருபத்தாறாம் வயது முதல், விரைவில் பவழவிழாக்காணும் இவர், சைவசித்தாந்தப் பெருமன்றத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டு வருகிறார். உறுப்பினராக அன்றி, உதவிச் செயலாளராகவும், பொருளாளராகவும், கணக்குத்கணிக்கையாளராகவும், பணிபுரிந்துள்ளார்.

1944 ஆம் ஆண்டில் சைவசித்தாந்த வகுப்புப் பயிற்சி பெற்றார். திருப்புகழ் சபையைப் பல ஆண்டுகளாக நடத்தி, அன்பர் பலருக்குத் திருப்புகழ் அமுதத்தைப் புகட்டிவருகிறார். 1978 ஆம் ஆண்டில் திருப்புகழ் அறக்கட்டளையை நிறுவினார். சைவ சித்தாந்தக் கொள்கைகளைப் பரப்புவதில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். சிறிய அளவில் வெளிவரும் இந்நூல் அரிய நுட்பங்களைக் கொண்டு விளங்க வேண்டும் எனச் சில விவரங்களை எனக்குத் தெரிவித்தார். இத்தகைய சீரிய சமயப் பணியாற்றிவரும் இப்பேரன்பருக்கும் இவர் குடும்பத்தினருக்கும் முருகப் பெருமான் தொடர்ந்து அருள் பாலிக்குமாறு வேண்டுகிறேன்.

இவர் இன்னிசையோடு பன்னிருதிருமுறைப் பாடல்களையும் திருப்புகழ்ப் பாடல்களையும் பாடவல்லவர், ஆதலால், இவர்

சைவசித்தாந்த இன்னிசைச் சொற்பொழிவாளராக விளங்க வேண்டுமென்று யான் இவரிடம் வற்புறுத்தி வந்தேன். இனியாகிலும் இப்பணியை இவர் மேற்கொள்ளுமாறு கோருகிறேன்.

திருப்புகழ்க் கருத்துகளைச் சைவசித்தாந்தத்துடன் ஒப்பிட்டுக் காண்பதில் எனக்கு இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இந்நிலையில் அரிய நுட்பங்களை எனக்குத் தெரிவித்துதவிய சைவசித்தாந்தப் பேரறிஞர், முன்னாள் மின்வாரிய முதன்மைப் பொறியாளர், திரு. ஆ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோ. மு. முத்துசாமி
27-6-1988

9. முதன்மைச்சாலை,
டாக்டர் இராதா கிருஷ்ணன்நகர்,
திருவான்மியூர், சென்னை-41.

வேலும் மயிலும் துணை

திருப்புகழில் சைவ சித்தாந்தம்

திருப்புகழில் சைவ சித்தாந்தம் என்னும் தலைப்பில் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்குத் திருப்புகழ் அருளிய அருணகிரி நாதர் வாழ்க்கை வரலாறு பற்றிய செய்திகள் ஓரளவு உதவும். ஆதலால் அவரது வரலாறு பற்றிச் சிறிது சிந்திப்போம்.

சைவ சமயப் பன்னிரு திருமுறைகளையும் பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும் அடக்க விலைப் பதிப்பாக வெளியிட்டுப் பல்லாயிரக்கணக்கில் மக்களைத் திருநெறியில் நிறுத்தி, அவர்கள் நல்லொழுக்க நெறியில் பிறவிப் பயன் எய்துமாறு, சைவசித்தாந்தப் பெருமன்றம் உதவி புரிந்தது. இப்பணி போன்றே, அருணகிரிநாதர் அருளிய அருள் நூல்கள் அனைத்தும் ஒரே நூலாகவும், அடக்க விலைப்பதிப்பாகவும் சைவ சித்தாந்தப் பெருமன்றம் வெளியிடவேண்டும் எனப் பலர் விரும்பினர். இவ்விருப்பத்திற்கேற்பச் சில காலம் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் செயலாளராகவும், சில காலம் அதன் தலைவ ராகவும், சில ஆண்டுகள் சித்தாந்த ஆசிரியராகவும் இருந்து வந்தவராகிய திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ.,பி.எல், 1935 ஆம் ஆண்டில், அருணகிரிநாதர் அருள் நூல்களை, ஒரே நூலாகப் பல செய்திகளோடு தொகுத்துச். சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் சார்பில் வெளியிட்டார். அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் என்னும் அந்நூல் அரிய செய்திகள் பலவற் றைக் கொண்டுள்ளது.

அருணகிரிநாதர் வரலாறு

குலம்

அருணகிரிநாதரைப் போன்ற மெய்ஞ்ஞானிகள் குலம் பற்றிய ஆராய்ச்சி தேவையில்லை. எனினும் வரலாற்று முறையில் உண்மை காணுதல் முறையாகும்.

அருணகிரிநாதர் திண்டிமகவி என்னும் பட்டப்பெயர் தாங்கியவர் எனவும், இவர் திருப்புகழ் தவிர "சோமவல்லி யோகானந்தம்" என்னும் வடமொழி நூலை இயற்றியவர் எனவும் ஒரு கருத்து அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ளது. அருணகிரிநாதர் தமிழ்ச்சந்தப் பாடல்களைப் பாட வல்லவர் என்பதை,

"முந்து தமிழ் மாலைக் கோடி கோடி
சந்தமொடு நீடு பாடிப்பாடி
முஞ்சர் மனைவாசல் தேடித்தேடி —உழலாதே
முந்தை வினையே வராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத்தேக
முந்தடிமையேனை யாளத்த —முனைமீதே"

என்னும் அவரது திருச்செந்தூர்த் திருப்புகழ் வாக்கால் உணர்ந்து கொள்ளலாம். ஆனால், தமிழ்மொழி நீங்கலாக, வடமொழி உட்பட, வேறு மொழிகளைத் திக்கித் திக்கிக் குளறித் தாம் சொல்வதாக இவரே கூறுவதால் இவருக்கு வடமொழிப் பயிற்சி சிறிது மட்டும் இருந்திருக்க வேண்டும் என்பதை

கொக்குக் கொக்கத் தலையிற் பற்றுச் சிக்கத் தளகக்
கொத்துற் றுக்குப் பிணியுற் —றவனாகிக்
குக்கிக் கக்கிக் கடையிற் பற்றத் துற்றுக் கழலக்
கொத்தைச் சொற்கற் றுலகிற் —பலபாஷை
திக்கித் திக்கிக் குளறிச் செப்பித் தப்பிக் கொடுபொய்ச்
செற்றைச் சட்டைக் குடிலைச் —சுமைபேணும்
சிக்கற் றுட்குக் கருணைச் சுத்தச் சித்தித் தமிழைத்
திட்டத் துக்குப் புகலப் —பெறுவேனோ"

என்னும் காஞ்சிபுரம் திருப்புகழ்ப் பாடற்பகுதி தெரிவிக்கிறது. எனவே "சோமவல்லி யோகானந்தம்" என்னும் வடமொழி நூலாசிரியர் திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர் அல்லர் எனக் கருதலாம்.

மேலும் அண்மையில் வெளிவந்துள்ள மற்றொரு கருத்து பாகவதசம்பு முதலிய நூல்களை இயற்றிய ராஜநாத கவியின் தந்தையாகிய சோணாத்ரி நாதரே, திருப்புகழ் அருளிய அருணகிரிநாதர் என்பதாகும். திருப்புகழ் அருளிய அருணகிரி நாதர் இச்சோணாத்ரி நாதருக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முந்தியவர் என்பதைத் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் எடுத்துக் காட்டியுள்ளார். ஆதலால், இச்சோணாத்ரி நாதர் வேறு, நம் அருணகிரிநாதர் வேறு எனக்கொள்ளுதல் பொருத்தமாகும்.

அருணகிரிநாதர் வடசொற்களை மிகுதியாகத் திருப்புகழில் பயன்படுத்தியிருப்பதாலும், இராமர், கிருஷ்ணர் ஆகியோர் வரலாறுகளைத் திருப்புகழ்ப் பாடல்கள் பலவற்றில் கூறியுள்ள தாலும் அருணகிரிநாதர் ஆரிய அந்தணர் எனச் சிலர் சில ஆண்டு களாகக் கூறி வருகிறார்கள். இக்கருத்தை ஏற்றுக்கொள்ள

இடமில்லை என்பதற்கு ம. பாலசுப்பிரமணிய முதலியார், கூறியுள்ளது இராமர் கிருஷ்ணர் ஆகியோர்களைப் பற்றி அருணகிரி நாதர் குறிப்பிட்டுள்ளது அருணகிரிநாதரின் பரந்த மனப் பான்மையைக் காட்டுகிறது என்பதாகும். சைவ நூல்கள் இராமரைப் பற்றியோ கிருஷ்ணரைப் பற்றியோ கூறக்கூடாது என்பதற்கு விதியில்லை. தேவாரத்தில் இராமரைப் பற்றிய குறிப்புகள் பல உள்ளன. மிக அண்மைக்காலம் வரையில் வடமொழிச் சொற்களைக் கலந்து உரையாடுதலிலும் எழுதுவதிலும் மக்கள் மகிழ்ந்து வந்தனர். விசேஷம், நமஸ்காரம் பிரசங்கம், கஷ்டம், இஷ்டம், நஷ்டம், விவாஹ முகூர்த்தம் முதலிய சொற்களைத் தங்கு தடையின்றி மக்கள் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால், தூய தமிழ் இயக்கம் தொடங்கப் பெற்ற பின்னர், வடமொழி கலந்த தமிழ் எழுதுவது குறைந்து கொண்டே வருகின்றது. ஆதலால், அருணகிரிநாதர் அந்தணர் என்பதற்கு இவை போதுமான காரணங்கள் ஆகா.

அருணகிரிநாதர் அந்தணர் அல்லர் என்பதற்கு பாலசுப்பிரமணிய முதலியார் எடுத்துக் கூறும் காரணம் ஆரிய அந்தணர்களைப் போலல்லாது அருணகிரிநாதர் ஆகமங்களின் உண்மையைப் பல திருப்புகழ்ப் பாடல்களில் ஒப்புக் கொண்டதாகும்.

இவ்வகையில், இவ்வுண்மையை,

''அவனிதனி லேபி றந்து மதலை யென வேத வழ்ந்து
அழகு பெற வேந டந்து —இளைஞோனாய்
அமிர்தரச மேமி குந்த குதலை மொழி யேபு கன்று
அதிவிதம தாய் வளர்ந்து —பதினாறாய்
சிவகலைகள் ஆக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிகளேநி னைந்து —துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை உன்றன் —அடிசேராய்'

என்னும் பழனிமலைத் திருப்புகழிலும்,

''உலக பசு பாச தொந்த —மதுவான
உறவுகிளை தாயர் தந்தை —மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச —லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்றன் —அருள்தாராய்

சலம் றுகு பூளை தும்பை —அணிசேயே
சரவணப வாமு குந்தன் —மருகோனே
பலகலைசி வாக மங்கள் —பயில்வோனே
பழனிமலை வாழ வந்த —பெருமாளே''

என்னும் பழனிமலைத் திருப்புகழிலும்

''நாவேறு பாம ணத்த பாதார மேறி னைத்து
நாலாறு நாலு பற்று —வகையான
நாலாறு மாக மத்தி னூலாய ஞான முத்தி
நாடோறு நான்றி னைத்து —நெறியாக''

என்னும் சுவாமிமலைத் திருப்புகழிலும் காணலாம். மேலும் வேதங்களைத் தாம் பயிலவில்லை என அருணகிரிநாதர் தெரிவித்துள்ளதை,

''மாலாசை கோப மோயாதெ நாளும்''

எனத் தொடங்கும் விராலி மலைத் திருப்புகழில் வரும்

''நாலான வேத நூலாக மாதி
நானோதி னேனு —மிலைவீணே
நாள் போய்வி டாம லாறாறு மீதில்
ஞானோப தேசம் —அருள்வாயே''

என்னும் பகுதி தெரிவிக்கின்றது.

அருணகிரிநாதர் அந்தணராக இருந்திருப்பின், அவர் தாய் தந்தையர் வேதத்தைக் கற்பித்திருப்பார்களேயன்றி ஆகமப் பயிற்சி தந்திருக்கமாட்டார்கள் எனப் பாலசுப்பிரமணிய முதலியார் தெரிவிக்கிறார். அருணகிரிநாதர், சிலமிக்க தாய் தந்தையர் தம்பி தங்கை ஆகியோருடன் வாழ்ந்தார் என்பதை

''மைந்த ரினிய தந்தை மனைவி
மண்டி அலறி —மதிமாய
வஞ்ச விழிகள் விஞ்சு மறலி
வன்கை யதனில் —உறுபாசம்
தந்து வளைய புந்தி அறிவு
தங்கு குலைய —உயிர்போமுன்
தம்ப முனது செம்பொனடிகள்
தந்து கருணை —புரிவாயே''

என்னும் திருப்புகழும்,

"தந்த பசிதனை யறிந்து முலையமுது
தந்து முதுகுதட —வியதாயார்
மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி —பகர்கேடா
வந்து தலைநவிர வீழ்ந்து தரைபுகம
யங்க ஒருமகிட —மிசையேறி
அந்த கனும்எனைய டர்ந்து வருகையினில்
அஞ்ச லெனவலிய —மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்பனெ மொழிய —வருவாயே

என்னும் திருப்புகழும் தெரிவிக்கின்றன. அருணகிரிநாதர் இல்லற வாழ்க்கை மேற்கொண்டார் என்பதை,

"மாத்திரை யாகிலு நாத்தவ றாளுடன்
வாழ்க்கையை நீடென —மதியாமல்
மாக்களை யாரையும் மேற்றிடு சீவிகள்
மாம்பரி வேபெறு —மனுபோக
பாத்திர மீதென மூட்டிடு மாசைகள்
பாற்படு ஆடக —மதுதேடப்
பார்க்கள மீதினில் மூர்க்கரை யேகவி
பாற்கட லாலென —உழல்வேனோ

என்னும் திருவேட்களத் திருப்புகழ்ப் பாடல் தெரிவிக்கின்றது. இவர் மனைவி 'கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை' யெனும் முதுமொழிக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கிய கற்பரசி என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது.

அருணகிரியார் குலம் யாது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது.

"மனைகனக மைந்தர் தமதழகு பெண்டிர்
வலிமைகுல நின்ற —நிலையூர்பேர்
வளரிளமை தஞ்ச முனைபுனைவ ளங்கள்
வரிசைதம ரென்று —வருமாயக்
கனவுநிலை இன்ப மதனையென தென்று
கருதிவிழி இன்ப —மடவார்தம்
கலவிமயல் கொண்டு பலவுடல்பு ணர்ந்து
கருவில்விழு கின்ற —தியல்போதான்"

என்னும் திருச்செந்தூர்த் திருப்புகழில் தாம் தோன்றியது "வலிமை குலம்" என அருணகிரிநாதர் குறிப்பிட்டுள்ளார்.

வலிமை மிக்க குலத்தினர் வேளாளர் என்பதைச் சேக்கிழார் பெரியபுராணத்துக் கோட்புலி நாயனார் புராணத்தில்

"நலம் பெருகுஞ் சோணாட்டு நாட்டியத்தான் குடிவேளாண்
குலம் பெருக வந்துதித்தார் கோட்புலிஎனும் பெயரார்
தலம்பெருகும் புகழ்வளவர் தந்திரியராய் வேற்றுப்
புலம் பெருகத் துயர் விளைப்பப் போர் விளைத்துப் புகழ் விளைப்பார்"

என்னும் பாடல் கோட்புலி நாயனார் வேளாளர் குலத்தினர் என்பதையும் அவர் தந்திரியர் என்னும் படைத் தலைவராக இருந்தார் என்பதையும் தெரிவிக்கின்றது. எனவே, இக்கருத்திற் கேற்ப, அருணகிரிநாதர் சிவவழிபாடாற்றிய வேளாளர் குலத்தினர் என்பது தெரியவருகிறது. தமது குலத்தை உயர்ந்த தாக அருணகிரிநாதர் கூறுவதைக் கொண்டு இவர் தமிழ் மக்களுள் உயர்ந்த குலமாகக் கருதப்படும் சைவ வேளாளராக இருத்தல் கூடும் எனப் பாலசுப்பிரமணிய முதலியார் கூறுகிறார்.

தாய்தந்தையர், மனைவி மக்கள் ஆகியோர்களோடு அருணகிரிநாதர் இல்லறம் நடத்தினார். எனினும், ஊழ்வினை காரணமாக, விலைமாதர் உறவுகொண்டு சிற்றின்பத் துறையில் எளியராகிப் பொருளிழந்து பிணிகளுற்றார் என்பதைப் புலப்படுத்தும் திருப்புகழ்ப் பாடல்கள் பல உள்ளன. பின்னர், அருணகிரிநாதருக்கு முருகவேள் உபதேசம் செய்ததைப் பற்றிக் கூறும் திருப்புகழ்ப் பாடல்கள் பலவற்றை ஆய்ந்து பார்ப்போம் எனில், திருவண்ணாமலை, இடைக்கழி, பழனி, செந்தில், திருத்தணிகை முதலிய பல தலங்களில் முருகவேள் ஆறுமுகங் களோடும், ஒரு முகத்தோடும், வேலு மயிலோடும், அருணகிரி நாதருக்குப் பலமுறை கனவிலும் நனவிலும் திருநோக்காலும் வாக்காலும் அருள்புரிந்த செய்திகள் பல தெரியவருகின்றன. திருவண்ணாமலையில் வெளிப்பட்டுத் தமக்கு முருகப்பெருமான் ஞானோபதேசம் செய்ததை அருணகிரிநாதர் பல முறை விதந்து கூறியுள்ளார்.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்களில் சைவ சித்தாந்தக் கருத்துகள் பல காணப்படுகின்றன. இவரது கவித் திறமை, சந்தப்பாவன்மை முதலியவை பெரிதும் பாராட்டப் பெறுகின்றன. உயர்ந்த சாத்திரக் கருத்துகளை எளிய முறையில் இனிய சந்தத்தில் அமைத்து இவர் கூறுவது எல்லையில்லா மகிழ்ச்சியை விளைவிக்கிறது. பாடல்களில் தொங்கல் சொற்களை முதலில் கொண்டு வந்தவர் இவரேயாவர்,

சைவ சித்தாந்தம்

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை விளக்குகிறது. இம் முப்பொருள்களையும் "பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போற் பசு பாசம் அநாதி" எனத் திருமூலர் திருமந்திரம் தெரிவிக்கிறது. பதி என்னும் சொல் இறைவனையும், பசு என்னும் சொல் உயிர்களையும், பாசம் என்னும் சொல் உயிர்களைக் கட்டியிருக்கும் தளையையும் குறிக்கின்றன. சைவ சமயத்தில் பதி சிவபெருமான். பதி பசு பாசம் ஆகிய முப்பொருள்களைத் தமக்கு உபதேசம் செய்யுமாறு அருணகிரிநாதர் முருகப்பெருமானிடம் வேண்டிக்கொண்டதை "அரிமருகோனே நமோ" என்று தொடங்கும் வயலூர்த் திருப்புகழில்,

"ஏழை நானுன்

"பதிபசுபா சோபதேசம் பெறவேணும்"

எனவும்

"இருகுழை மீது தாவடி இடுவன ஓதி நீழலின்"

எனத் தொடங்கும் திருப்புகழ்ப் பாடலில்

"தமியேனும்

கதிபெற ஈடா றாதன பதிபசு பாச மானவை
கசடற வேறு வேறுசெய் —தருள்வாயே"

எனவும் அருணகிரிநாதர் வேண்டுகிறார்.

பதி இயல்

சைவ சித்தாந்தம் சிவபெருமானைப் பதியெனக் கொள்கிறது சிவபெருமானுக்கும் ஆறுமுகக் கடவுளாகிய முருகப் பெருமானுக்கும் வேறுபாடு இல்லை என்பதை, அருணகிரிநாதர் அருளிய

"அவகுண விரகனை வேதாள ரூபனை"

எனத் தொடங்கும் புலியூர் [சிதம்பரம்] திருப்புகழிலுள்ள

"மலைமகள் உமைதரு வாழ்வே மனோகர மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவாந மோநம
தெரிசன பரகதி யானாய் நமோநம
திசையினு மிசையினும் வாழ்வே நமோ நம
—செஞ்சொல் சேரும்
தினைபுன வனிதைம ணாளாந மோநம
திரிபுர மெரிசெய்த கோவேந மோநம
செயசெய ஹரஹர தேவாசு ராதிபர் —தம்பிரானே

என்னும் பகுதி தெரிவிக்கிறது.

சிவபெருமானுக்கும் முருகப் பெருமானுக்கும் வேறுபாடில்லை என்னும் இக்கோட்பாட்டிற்கு வேறு ஆதாரங்கள் உள்ளனவா என்பது பற்றிச் சிறிது ஆராய்வோம். முருகப் பெருமானுக்குள்ள முகங்கள் ஆறும் அவருக்குச் சிவபெருமான் தந்தவை. தம்முடைய ஐந்து முகங்களோடு அதோ முகத்தையும் சிவபெருமான் முருகப் பெருமானுக்கு அளித்தார் என்பதை "ஐந்து முகத்தோடு அதோமுகம் தந்து" என்பதாகக் கந்தர் கலிவெண்பா கூறுகிறது. அதோமுகமும் சிற்சக்தியை உணர்த்தி நிற்பது என்பதனைத் திருமூலர் "அதோமுகமாகிய அந்தமில் சக்தி அதோமுகமாகி அமர்ந்திருந்தாரே" எனக் கூறுகிறார் (திருமந்திரம் 525 இரண்டாம் தந்திரம் அதோமுகதரிசனம்)

ஆறுமுகப் பெருமானின் ஆறுமுகங்களும் ஆறு தத்துவங்களையும் (சாதாக்கிய தத்துவங்களை) உணர்த்துவதாக உள்ளன. மேலும் ஆறுமுகப் பெருமானது ஆறுமுகங்களில் ஐந்துதிருமுகங்கள் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் (அழித்தல்), மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களைச் செய்யும் சிவசக்திகள், அதோமுகம் ஞானமேவடிவான சிற்சக்தி.

ஷண்முகப் பெருமான் திருமுகங்கள் ஆறும் அவர் பிரணவ வடிவுடையவர் என்பதையும், அவர் ஓங்காரத்தின் உட்பொருளாய் உள்ளவர் என்பதையும் உணர்த்தி நிற்பன, 'ஓம்' என்ற பிரணவத்திற்குப் பல்வேறு கலைகள் (கூறுகள்) சாத்திரங்களில் கூறப்பெறும். இவற்றுள் பஞ்சகலைப் பிரணவமும் ஒன்று. இப்பிரணவம் ஐந்து கூறுகளையுடையது. இவை அகாரம்; உகாரம்; மகாரம்; விந்து; நாதம் என்ற ஐந்துமாம். ஐந்தும் சேர்ந்ததே 'ஓம்' என்ற பிரணவம். 'ஓம்' என்ற சமட்டிப் பிரணவமே அதோமுகம்.

சிவபெருமானுக்குரிய முகங்கள் ஐந்து. அவற்றில் ஈசானம் எல்லா உலகங்களுக்கும் அருள்செய்வதும் எல்லா மார்க்கங்களுக்கும் மேலானது மானதைத் குறிக்கும் வகையில், மேல் நோக்கிய முகமாகும். உயிர்க்குயிராக நின்று ஞானத்தை வெளிப்படுத்தி நிற்பது தற்புருடம். இது கிழக்கு நோக்கிய முகம். கோரமாகிய உலகப் பற்றிற்கு விரோதமாயிருந்து உயிர்களுக்குச் சாந்த நிலையை வகுத்தளிப்பது தெற்கு நோக்கிய அகோரமுகம். உயிர்கள் செய்த வினைகளுக்கேற்ப அவற்றிற்குப் போகங்களை அளித்துக் கருணைபுரிவது வடக்கு நோக்கிய வாமதேவ முகம். உயிர்களுக்கு உடம்புகளைப் படைக்கும் தொழிலை வேகத்தோடு

செய்வது மேற்கு நோக்கிய சத்தியோசாதமுகம். இவ்வகையில் சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள்; பதினைந்து திருக்கண்கள்; பத்துத்திருக்கைகள்; இரண்டு திருவடிகள் ஆக முப்பத்திரண்டு இலக்கணங்கள் உள்ளன. முருகப் பெருமானுக்கும் ஆறுதிரு முகங்கள், பன்னிரண்டு திருக்கண்கள் பன்னிரண்டு திருக்கைகள், இரண்டு திருவடிகள் என்பனவாகிய முப்பத்திரண்டு இலக்கணங் கள் அமைந்துள்ளன. ஆறுமுகப்பெருமானுக்குக் கண்கள் பதினெட்டு என்று வடமொழிக்கந்த புராணம் கூறுகின்றதாகப் பாம்பன் சுவாமிகள் எடுத்துக் காட்டுகிறார். (தகராலய் ரகசியம் 2ஆம் காண்டம் பாடல் 60)

"இரண்டு திருவடிகளையும் 12 தோள்களையும் உடைய சண்முகப் பெருமானுக்கு 18 கண்கள்" சம்பவகாண்டம் 38 ஆம் அத்தியாயம்.

"ஆறு திருமுகங்களும் 12 புயங்களும் 18விழிகளும் உடைய திருமேனியானது உலக அனுக்கிரக நிமித்தமாக அங்கீகரிக்கப் படுகிறது" (சம்பவ காண்டம் 35ஆம் அத்தியாயம்) "ஆறு திரு முகங்களையும் 18 நேத்திரங்களையும் 12 ஆயுதங்கள் தரித்த 12 கைகளையும் உடையவன் இளம்பெருமான்" (சம்பவ காண்டம் 41ஐம் அத்தியாயம்) வெளிப்படத் தெரியவராத நெற்றிக்கண்கள் ஆறு ஆறுமுகப்பெருமானுக்கு உண்டு. இவற்றை விடுத்து, இவர் 12 கண்கள் உடையவராகத்துதிக்கப் பெறுகிறார். இவ்வகையில் "பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்" என்பது அப்பர் அடிகள் அருள்வாக்கு.

சிவபெருமானுக்குரிய அருட்குணங்கள் எட்டு அவையாவன:-

(1) முற்றுணர்வு, (2) வரம்பில் இன்பம் (3) தன்வயம் (4) பேரருள் (5) முடிவில் ஆற்றல் (6) இயற்கை உணர்வு (7) இயல் பாகவே பாசம் இன்மை (8) தூயஉடம்பினன் ஆதல். இவற்றுள் இயல்பாகவே பாசம் இன்மையைத் தன் வயத்திலும், தூய உடம் பினன் ஆதலை இயற்கை உணர்விலும் அடக்கி, முற்றுணர்வு, வரம்பில் இன்பம், தன்வயம், பேரருள், முடிவில் ஆற்றல், இயற்கை உணர்வு ஆகிய ஆறுமே இறைவன் அருட்குணங்கள் எனக்கொள் வதுண்டு. இந்த ஆறு அருட்குணங்களையும் ஆறுமுகங்களாகக் கொண்டவரே ஆறுமுகப்பெருமான் என்று.

ஏவர் தம் பாலும் இன்றி எல்லைதீர் அமலற்குள்ள
மூவிரு குணனும் சேய்க்குமுகங்களாய் வந்ததென்னப்
பூவியல் சரவணத் தண்பொய்கையில் வைகும் ஐயன்
ஆவிகள் அருளுமாற்றால் அறுமுகம் கொண்டான் அன்றே

என்னும் கந்தபுராணப் பாடல் தெரிவிக்கின்றது.

(உற்பத்தி காண்டம் திருவவதாரப்படலம் 94)

மற்றும் "ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும் பேதமன்று" எனக் கந்தபுராணம் கூறுகிறது.

முருகப்பெருமான் மும்மூர்த்திகளாகவும் அவர்களுக்கு மேற்பட்டமுதற்கடவுளாகவும் தில்லை யம்பலத்தில் விளங்குபவராகவும் அருள்புரிகிறார் என்பது அருணகிரியார் தரும் விளக்கமாகும். முருகப்பெருமான் உலகமெலாமாகி வேறாய் உடனுமாய் விளங்குகிறார் என்பதை அருணகிரிநாதர் தாம் அருளிய

"அங்கை மென் குழலாய்வார் போலே"

எனத்தொடங்கும் திருச்செந்தூர்த் திருப்புகழில் உள்ள

"மங்கு லின்புறு வானாய் வானூ
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றும்புகை நீறா, வீறா —எரிதீயாய்
வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்பரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானாய் —மலரோனாய்
உங்கள் சங்கரர் தாமாய் வானாய்
அண்ட பந்திகள் தாமாய் நாமாய்
ஒன்றி னுங்கடை தோயா மாயோன் —மருகோனே"

என்னும் பாடற்பகுதியில் தெரிவிக்கிறார். அருணகிரிநாதரின் இக் கருத்து, முருகப் பெருமான், "வானாய்" "காலாய்" "எரிதீயாய்" "நீராய்" "பாராய்" என்பனபோன்று உள்ளார் என்பதால் அவர் "உலகெலாமாகி" நிற்கிறார் என்பதும், "நீயாய்" "நானாய்" அவர் உள்ளார் என்பதால் அவர் "உடனுமாகி" உள்ளார் என்பதும், அவர் ஒன்றிலும் கடை தோயாமல் உள்ளார். என்பதால் "வேறாய் உள்ளார்" என்பதும் குறிக்கப்படுகிறது. இக்கருத்தைச் சிவஞானசித்தியாரின் இரண்டாம் சூத்திரத்திலுள்ள

"உலகெலா மாகி வேறா யுடனுமா யொளியா யோங்கி
அலகிலா உயிர்கள் கன்மத் தாணையின மர்ந்து செல்லத்
தலை வனாயிவற்றின் றன்மை தனக்கெய்த லின்றித்தானே
நிலவு சீரமலனாகி நின்றன னீங்கா தெங்கும்"

என்னும் பாடலில் காணலாம்.

சத்தியும் சிவமும் பிரிப்பின்றி நிற்கும் தன்மையை அருணகிரிநாதர் குறிப்பிடுவது இங்குக் கவனிக்கத் தக்கதாகும். சிவசத்தியை ஆலமுண்டவள் என "இலகிதழ் கோதிநேதி மதகலை ஆரவார" எனத் தொடங்கும் பழமுதிர்சோலைத் திருப்புகழில் சிவசக்தி "ஆலமுணி" எனவும்.

"மூளும் வினை சேர மேல் கொண்டிடாவைந்து" எனத் தொடங்கும் திருச்செந்தூர்த் திருப்புகழில்

"காள விட மூணி" எனவும்
"கருணை சிறிதுமில் பறிதலை நிசிசரர்"

எனத்தொடங்கும் அருணைத் திருப்புகழில் "திரிபுரதகனி" எனவும் அருணகிரிநாதர் அறிவித்துள்ளார். ஆலமுண்டவரும் திரிபுரம் எரித்தவருமாகிய சிவபெருமான் புரிந்த செயல்களை சிவசத்திபுரிந்ததாக அருணகிரிநாதர் தெரிவித்துள்ளது சக்தி சிவத்தோடு இணைந்திருப்பதைக் காட்டுகிறது. இக்கருத்தையே

"சத்தியும் சிவமுமாய தன்மையிவ்வுலகமெல்லாம்
ஒத்தொவ்வா வாணும் பெண்ணு முணர் குண குணியுமாகி
வைத்தனனவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையு மறியார் பீடலிங்கத்தினியல்பு மோரார்"

என்னும் சிவஞான சித்தியார் சுபக்கப்பாடலில் காணலாம்.

பசு இயல்

இன்ப துன்ப நிகழ்ச்சிகள் உயிர்தோறும் வேறுவேறாக இருத்தலால் உடம்பு தோறும் உள்ள உயிர்கள் அனைத்தும் தனித்தனி உயிர்களாகும். "சிவபத்தர்" எனவும் "அல்லாதார்" எனவும் உயிர்களை மெய்கண்டார் பன்மையில் கூறுவதாலும் அவ்வெண்ணிறந்தன எனக்கொள்ளுதல் வேண்டும். "உரைதரும் இப்பசுவர்க்கம்" என உமாபதி சிவம் விளக்கமாகக் கூறியுள்ளார். "எண்ணரிதாய்" எனவும் "பிறந்த நாள் மேலும் பிறக்கும் நாள்போலும் — துறந்தோர் துறப்போர் தொகை" என உமாபதிசிவம் தெரிவித்துள்ளார். ஆதலால் உயிர்கள் எண்ணி றந்தன என்பது தெரியவரும் "சார்ந்ததன் வண்ணம் ஆதல்" என்பது உயிர்களின் உண்மை இயல்பு. அஃதாவது அது எந்தப் பொருளைச் சார்கின்றதோ அந்தப்பொருளின் தன்மையையே தன்தன்மையாகக் கொண்டு நிற்றலாகும்.

உயிர் பாசத்தைச் சார்ந்தவழிப் பாசத்தின் தன்மையையும் பதியைச் சார்ந்த வழிப் பதியின் தன்மையையும் ஏற்கும்; உயிர்

க்குக்குப் பேரின்பத்தை விரும்புதலே இயற்கையாதலின் உயிர் பாசத்தைச் சார்ந்திருந்து வந்தபோதிலும் ஒரு காலத்தில் பதியைச் சாரும் நிலையும் அதற்கு ஏற்படும். அருணகிரிநாதர் சூழ்வினை காரணமாகத்தாம் முதலில் செல்வச் செருக்குற்றுப் பாசத்தின் முதற்கூறாகிய ஆணவத்தோடு வாழ்ந்ததை ''அனிச் சங்கார் முகம் வீசிடமாக'' எனத் தொடங்கும் திருச் செந்தூர்த்திருப்புகழில்,

''தம்மை நீணிதி
தனைக் கண்டாணவ மான நிர் மூடனை
விடக் கன்பாய் நுகர் பாழனை''

எனக்குறிப்பிட்டுள்ளார். அந்நிலையிலிருந்து ஈடேற அவர் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார்.

உயிருக்குச் சுதந்தரமில்லை எல்லாம் இறைவன் இச்யல் என்னும் கொள்கையை அருணகிரிநாதர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை ''ஊனே றெலும்பு சீசீ மலங் களோடே'' எனத் தொடங்கும் திருப்புகழில்

''நானா ரொடுங்க நானார் வணங்க
நானார் மகிழ்ந்து —உனையோத
நானா ரிரங்க நானா ருணங்க
நானார் நடந்து —விழநானார்
தானே புணர்ந்து தானே அறிந்து
தானே மகிழ்ந்து —அருளூறித்
தாய்போல் பரிந்த தேனோடு தந்து
தானே தழைந்து —சிவமாகித்
தானே வளர்ந்து தானே இருந்த
தார்வே ணிஎந்தை —அருள்பாலா
சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர் —பெருமாளே''

என்னும் திருப்புகழ்ப் பாடலில் அறிவிக்கிறார். இக்கருத்து சிவஞான போதம் 8 ஆம் சூத்திரம். இரண்டாம் அதிகரணத்திலுள்ள,

''அறிவிக்க வன்றி யறியா வுளங்கள்
செறியுமா முன்பின் குறைக—ணெறியிற்
குறையுடைய சொற்கொள்ளார் கொள்பவத்தின் வீடென்க
குறைவில் சகன் சூழ்கொள் பவர்க்கு.

என்னும்இரண்டாம் உதாரண வெண்பாவில்தெளிவாகஉள்ளது.

பாசத்திலடங்கிய ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் நீங்குமெனில் பதியை அடையவழி பிறக்கும். இதனை ''ஐந்து பூதமும் ஆறுசமயமும்'' எனத் தொடங்கும் விராலிமலைத் திருப்புகழில்,

ஆணவ மாயை கருமம லங்கள்
போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது —பெறுவேனோ.

என அருணகிரிநாதர் காட்டுகின்றார்.

இவ்வுண்மையைத் திருக்களிற்றுப் படியாரிலுள்ள

"நல்ல சிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழியும்—வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணா அரன்.

என்னும் வெண்பா ஒருவாறு கூறுகிறது.

பாசவியல்

பசுக்களாகிய உயிர்களைப் பிடித்துள்ளவை பாசம் எனப்படும் ஆணவம், கன்மம், மாயை என்பன. மும்மலங்களும் நீங்கப் பெறுவதற்காக அருணகிரிநாதர்.

"சுருளளக பார" எனத்தொடங்கும் பழனிமலைத் திருப்புகழில்.

"...........அறிவைஅறி வால றிந்து —நிறைவாகி
அகிலபுவ னாதி எங்கும்
வெளியுற மெய்ஞ்ஞான இன்ப
அமுதை யொழியா தருந்த —அருள்வரயோ"

என் முருகப் பெருமானிடம் வேண்டுகிறார். இக்கருத்து, சிவஞான சித்தியார் எட்டாவது சூத்திரத்தின் 30 ஆவது பாடலில்.

அறியாமை யறிவகற்றி யறிவி னுள்ளே
யறிவுதனை யருளினா னறியாதே யறிந்து
குறியுர்தே குறித்தந்தக் கரணங்களோடுங்
கூடாதே வாடாதே குழைந்திருப்பை யுராயிற்
பிறியாத சிவன்றானே பிரிந்து தோன்றிப்
பிரபஞ்ச பேதமெலாந் தானாய்த் தோன்றி
நெறியாலே யிவையெல்லா மல்ல வரகி
நின்றென்றுந் தோன்றிடு வனிராதார னாயே.

என்பதாக விளக்கப் பெறுகிறது.

தத்துவங்களைக் கடந்து செல்ல வேண்டும் என்பதை அருணகிரிநாதர் "அதிமதங்க" எனத் தொடங்கும் திருப்புகழில் "தத்துவம் அனைத்துந் தொலையுமந் தத்துக் கப்புறம் நிற்கும் படி பாராய்" எனக்கோருகிறார்.

முப்பத்தாறு தத்துவங்களையும் அறுபது தாத்துவிகங்களை யும் கடந்த பேற்றை அருணகிரிநாதர் வேண்டிக் கொண்டதைத் திருப்புகழ்ப்பாடல்கள் பலவற்றில் காணலாம்.

"அத்த வேட்கைப் பற்றி" எனத் தொடங்கும் திருப்புகழில், தாத்துவிகம் 96 என்பதை.

"தத்வ நாற்பத் தெட்டு நாற்பத்
தெட்டு மேற்றுத் —திடமேவும்
தர்க்க சாத்ரத் தக்க மார்க்கச்
சத்யவாக்யப் பெருமாளே"

எனவும் "ஆறு மாறும்" எனத்தொடங்கும் தேவனூர்த் திருப்புகழில்,

"ஆறுமாறு மஞ்சுமஞ்சும் ஆறுமாறு மஞ்சு மஞ்சும்
ஆறுமாறும் மஞ்சுமஞ்சும் அறுநாலும்" எனவும்,

"ஒருபதுமிருபது" எனத்தொடங்கும் திருமலைத் திருப்புகழில்.

"ஒருபது மிருபது மறுபது முடனறும்
உணர்வுற இருபதம் —உளநாடி
உருகிட முழுமதி தழலென ஒளிதிகழ்
வெளியொடு மொளிபெற —விரவாதே"

எனவும் குறிப்பிடுகிறார்.

முப்பத்தாறு தத்துவங்களாவன: சுத்தமாயையில் தோன்றும் சிவம் சத்தி சாதாக்கியம் ஈசுரம் சுத்தவித்தை என்னும் சிவ தத்துவம் ஐந்து; அசுத்த மாயையில் தோன்றும் காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை என்னும் வித்தியா தத்துவங்கள் ஏழு; கலை என்னும் தத்துவத்திலிருந்து தோன்றும் மூலப் பிரகிருதி எனப்படும் ஆன்ம தத்துவம், அகங்காரம், மனம், புத்தி, சித்தம், ஞானேந்திரியங்கள் ஐந்து, கன்மேந்திரியங்கள் ஐந்து,தன் மாத்திரைகள் ஐந்து, பூதங்கள் ஐந்து ஆகியவை முப்பத்தாறு தத்துவங்கள். சிவம் முதல் பிருதிவி ஈறாகச் சொல்லப்படும் முப்பத்தாறு தத்துவங்களும் மூலப்பொருள்கள். அவற்றால் ஆகிய காரியங்கள்—தாத்துவிகங்கள் அறுபது. அவை பிருதிவின் கூறுகளாகிய எலும்பு, தசை, மயிர், தோல், நரம்பு என்னும் ஐந்து, அப்புவின் கூறுகளாகிய சிறுநீர், இரத்தம், சிலேத்துமம், வியர்வை, சுக்கிலம் அல்லது சுரோணிதம் என்னும் ஐந்து; தேயுவின் கூறுகளாகிய இதயத்தில் வெப்பம், பசித்தீ, கண்ணில் வெப்பம், உடம்பில் வெப்பம், பைத்தியம் என்னும் ஐந்து; வாயுவின் கூறுகளாகிய உதானன், பிராணன், அபானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் என்னும் வாயுக்கள் பத்து; ஆகாயத்தின் கூறுகளாகிய சுத்தி, அலம்புடை, இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, குகுதை, சங்கினி,

சிகுவை, புருடன் என்னும் நாடிகள் பத்து; கன்மேந்திரியங்களின் விடயங்களாகிய வசனம், கமனம், தானம், விசார்க்கம், ஆனந்தம் என்னும் ஐந்து; சுத்தா மாய விரி விடயங்களாகிய சத்தம், பரிசம்; ரூபம் ரசம் கந்தம் என்னும் ஐந்து; அகங்காரத்தின் கூறுகளாகிய தைகதம், வைகாரிகம், பூதாதி என்னும் மூன்று; காமம், குரோதம்; உலோபம், போகம், மதம், என்னும் குற்றங்கள் ஐந்து: குணத்தின் கூறுகளாகிய சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் மூன்று; சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் வாக்கு நான்கு; இவ்வாறு தத்துவங்கள் முப்பத்தாறுடன், தாத்துவிகம் அறுபதும் கூடக் கருவிகள் தொண்ணூற்றாறாகும்.

தத்துவ தாத்துவிகங்களின் தொகை தொண்ணூற்றாறு என அருணகிரிநாதர் குறிப்பிட்டிருப்பது அரியதொரு செய்தியாகும்.

சாதன இயல்

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவசித்தாந்தின் நான்கு பாதங்களின் உண்மையை அருணகிரிநாதர்,

''சரியையாளர் மக்கிரியை யாளர்க்கும்''

எனத்தொடங்கும் கதிர்காமத் திருப்புகழிலும்

''சரியை யிது வீறு கிரியை யிதுயோக
தவசுமிகு ஞான—மென ஓதும்''

எனத்தொடங்கும் கரபுரி (விரிஞ்சைத்) திருப்புகழிலும் தெரிவித்துள்ளார்.

சைவ சித்தாந்தத்தில் கூறப்படுவன :-

சரியை :

சரியையாவது, சிவாலயங்களில் சென்று திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், நந்தவனம் வைத்தல், பூப்பறித்து மாலை கட்டிக் கொடுத்தல், உருவத் திருமேனிகளாய மாகேசுர மூர்த்தங்களில், ஒருவரை நியமமாக வழிபடுதல், மாகேசுரராகிய சிவனடியார்களை வழிபடுதல் முதலியன.

கிரியை :

கிரியையாவது, இலிங்க மூர்த்தியை, கணிகமாகவும், உடையவராகவும் எழுந்தருள்வித்துப் பூசாத்திரவியங்களைத் திரட்டிக் கொண்டு ஓரிடத்தில் அமர்ந்து, பூதசுத்தி முதலிய ஐந்து சுத்திகளைச் செய்து, அகத்தும், புறத்தும் சிவபெருமானை வழிபடுதலாம்,

யோகம் :

யோகமாவது, 'இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னும் எட்டு வகைகளில் படிப்படியாக நிற்றலாம்.

ஞானம் :

ஞானமாவது ஞானகுருவின் உபதேசத்தைக் கேட்டலும், பின் அதனைச் சிந்தித்தலும், பின் உபதேசப் பொருளைத் தெளிதலும், தெளிந்த வண்ணம் நிட்டையில் அழுந்தலுமாம். இதனை சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரத்தின் இரண்டாம் அதிகரணத்து

''சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ர மார்க்கந்
தாதமார்க் கம்மென்றுஞ் சங்கரனையடைய
நன்மார்க்க நாலவைதா ஞானயோக
நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்
சன்மார்க்க முத்திகள்சா லோக்கியசா மீப்ய
சாரூப்ய சாயுச்ய மென்று சதுர் விதமா
முன்மார்க்க ஞானத்தாலெய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபதமென்பர்''.

என்னும் 18ஆவது பாடல் தெரிவிக்கிறது.

அருணகிரிநாதருக்கு ஐந்தெழுத்திலும் பெரும்பற்று இருந்தது என்பதை

''அவாமருவி'' எனத் தொடங்கும் சுவாமிமலைத் திருப்புகழில்,

''சிவாயநம நாமமொரு காலும்நினை யாததிமி
ராகரனை வாவென் றருள்வாயே'' என்னும் பாடற் பகுதியும்

''குகனே குருபரனேயென நெஞ்சில்'' எனத் தொடங்கும் கனகசபை (சிதம்பரம்) திருப்புகழில்

''...நமசிவ யோ மெனகொஞ்சி —களிகூரப்
பகலுமி ரவுமி லாவெளி யின்பு''

என்னும் பாடற்பகுதியும்

''சூதினுண வாசை'' எனத் தொடங்கும் திருப்புகழில்,

''ஒநமசி வாயகுரு பாதமதி லேபணியும்
யோகமயி லாவமலை —மகிழ்பாலா'

என்னும் பாடற்பகுதியும் தெரிவிக்கின்றன.

சைவசித்தாந்தத்தில் ஐந்தெழுத்தோதுதல் சிறப்பான இடம், பெற்றுள்ளது. இவ்வகையில் சிவஞான சித்தியார் வகுத்துள்ளதை, அதன் 9ஆம் சூத்திரத்து மூன்றாம் அதிகரணம்

"அஞ்செழுத்தா லான்மாவை யரனுடைய பரிசு
மரனுருவு மஞ்செழுத்தா லமைந்தமையு மறிந்திட்
டஞ்செழுத்தா லங்ககர நியாசம் பண்ணி
யான்மாவி னஞ்செழுத்தா லிதயத் தர்ச்சித்
தஞ்செழுத்தாற் குண்டலியினனலை யோம்பி
யணைவரிய கோதண்ட மணைந்தருளின் வழிநின்
றஞ்செழுத்தை விதிப்படியுச் சரிக்கமதியருக்க
னணையரவும் போற்றோன்று மான் மாவிலரனே."

என்னும் 8ஆவது பாடல் விளக்குகிறது.

பயனியல்

சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் சாதனங்களால் அடையும் பயன் இரண்டு. ஒன்று பாச நீக்கம். மற்றது சிவப்பேறு. இப்பேற்றை அடைய நல்வினை தீவினை மும்மலங்கள் ஆகியவை அற்ற நிலையில் இரண்டற முருகப் பெருமானுடன் கலத்தலை அருணகிரிநாதர் விரும்புகிறார். இதனை அவர் "அறுகு நுனி பனி யனைய" எனத் தொடங்கும் இடைமருதூர்த் திருப்புகழில்

"இணை அடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏகபோகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே"

எனவும்

"நாவேறு பாமணத்த" எனத் தொடங்கும் சுவாமிமலைத் திருப்புகழில்,

"நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வ தற்குன் —அருள்கூர"

எனவும் வேண்டுகிறார்.

ஞானம் பெற்ற நிலையிலும் மும்மலங்களின் தாக்குதலால் தீமை ஏற்படக்கூடும். அதனைத் தவிர்க்க அருணகிரிநாதர் மெய்யடியார்கள் தொடர்பை விரும்புகிறார். இவ்வகையில் இத் தொடர்பை "சண்டு மொழி கொம்பு" எனத் தொடங்கும் திருச் செந்தூர்த் திருப்புகழில்

"பண்புடைய சிந்தை யன்பர்
தங்களினு டன்கலந்து
பண்புபெற அஞ்ச லஞ்சல் —எனவாராய்"

எனவும்

"கரையற உருகுதல்" எனத்தொடங்கும் திருச்செங்கோட்டுத் திருப்புகழில்,

"உறவொடு புனைதர நினைதொழு மடியரொடு
ஒன்றாக என்று —பெறுவோனோ"

எனவும்

"கறுத்த தலை வெளிறு மிகுந்து"

எனத்தொடங்கும் வடமலைத் (வேங்கடம்) திருப்புகழில்

"உனக்கடிமை படும வர்தொண்டு புரிவேனோ"

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவர் முருகப் பெருமானைப் பல தலங்களில் போற்றித் துதித்துள்ளார். இவர் மேற்கொண்ட இத்தகைய அரிய தெய்வப் பணியும் அடியார் சேவையும் சிவஞான போதத்தின்

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனெனத் தொழுமே"

என்னும் 12ஆம் சூத்திரத்தின் இலக்கணத்திற்கு நேரொத்துள்ளது.

அருணகிரியார், திருஞானசம்பந்தர் முருகனின் அவதாரம் எனவே கருதி அவர் புரிந்த அற்புதங்களை முருகன் அருளியவைகளாகவே பல இடங்களில் பாடியிருக்கிறார். அப்பர், சுந்தரர் பற்றியும், குருலிங்க சங்கம வழிபாடு பற்றியும் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். இவை யாவும் அவர் சிறந்த சித்தாந்த சைவ நெறியினர் என்பதற்குச் சான்றுகளாகும்.

திருவண்ணாமலையில் உயர் குலத்தில் தோன்றிய அருணகிரி நாதர் இல்லறம் மேற்கொண்டு வாழ்ந்த காலத்தில் ஊழ்வினை காரணமாக, வறுமையுற்றுப் பிணியெய்தித் தமது உயிரை விடத் துணிந்தபோது முருகப் பெருமானால் தடுத்தாட் கொள்ளப் பெற்றார். பின்னர் முருகப் பெருமானின் பலவகை நல்லுபதேசங்களும் அருள்பாலிப்பும் பெற்றுத் திருப்புகழ் முதலிய அருள் நூல்களால் துதித்துப் பல தலங்களுக்குச் சென்று சுத்தாத்துவித சைவசித்தாந்தத்தில் கூறப்படும் பதிப்பொருளாகவே முருகப் பெருமானை வழிபட்டுப் பல அற்புதச் செயல்களைப் புரிந்தார். முற்றும் துறந்த தாயுமானவராலே

"ஐயா அருணகிரியப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல்விளம்பினர் யார்?

என அருணகிரிநாதரைப் போற்றியதிலிருந்து இவருடைய அருமையும் பெருமையும் நன்கு விளங்கும்.

[illegible]

[illegible]